## அயகம பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

---

### 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 மே 23 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அயகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன பெறுவனவுகளில் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தும் பெறுமதி மாத்திரம் வருமானத்திற்கு எடுக்கும் போது தடுத்து வைத்தல் பெறுமதி ஆகிய ரூபா 531,636 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மந்திரிமாருக்காக எரிபொருள் படியாக 09 அங்கத்தவர்களுக்கு மொத்த பெறுமதி எனப்படும் ரூபா 45,000 தொகையினை செலுத்தியிருந்த போதிலும் அவர்களுக்கு 15 நாட்களுக்கான எரிபொருள் படி மாத்திரமே உரித்துடையது. அதன் பிரகாரம் பதவியணியல்லாத எரிபொருள் செலவுத் தலைப்பில் செலவுகள் ரூபா 22,500 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்ததுடன் மந்திரிமார்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 22,500 கணக்குகளிலும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 46,653 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகைக் கணக்கின் ஊடாக மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது காப்புறுதி நட்ட ஈடாகக் கிடைத்திருந்த ரூபா 77,759 தொகையினை வருமானத்திற்கு எடுக்காமல் வைப்புக் கணக்கின் மூலம் செலவிடப்படாமையால் ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் மேற்கூறிய பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தொகை ரூபா 52,656,402 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு மே 15 ஆந் திகதி சபையின் பதவிக் காலம் முடிவடைந்திருந்ததுடன், அங்கத்தவர்களுக்கு சபை மந்திரிமாருக்கு மே மாதத்திற்கான படியாக ரூபா 150,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் அவர்களுக்கு உரிமையுள்ள 15 நாட்களுக்கான படி மாத்திரமே மீளளிப்புச்

செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சம்பள செலவுகள் ரூபா 75,000 இனை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பிரதேச சபையினால் மந்திரிமார்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 75,000 தொகை கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 8,533,138 வித்தியாசம் காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| | பிரிவு 24 | சபையின் வரையறையில் சொந்தமான பாதைகளை முறையாக இனங்கண்டு அளவைகள் மேற்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனனினும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 571 | ரூபா 679,205 தொகை பெறுமதியான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 1,588,026 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 4,360,166 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 5,948,192 இனால் அதிகரித்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டை விட 136 சதவீதம் அதிகரிப்பு ஒன்றென அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பாக மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் வருமானத்தில் அதிகரிப்பு ஒன்றென அவதானிக்கப்பட்து.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 485 | 638 | 292 |
| வாடகை | 3,471 | 3,255 | 322 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 363 | 423 | 10 |
| ஏனைய வருமானங்கள் | 22,211 | 23,088 | 6,404 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது இரண்டு வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீட்டு தொகையை விட முறையே 11 சதவீதத்தினை மற்றும் 28 சதவீதத்தினால் குறைவு ஒன்றினை காட்டியது.

### 2.3.3 வீத வரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 61,937 இற்கான வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் படி மேற்கூறிய நிலுவை வீதவரியினை அறவீடு செய்யும் நோக்கில் ஆதனங்களை தடைசெய்யும் செயற்பாட்டினை கடைபிடிப்பதற்காக முன்வந்திருக்கவில்லை.

### 2.3.4 வாடகை

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பல வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 75,519 தொகை நிலுவை ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

### 2.3.5 ஏனைய வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பவற்றுடன் தொடர்புடைய வருமானப் பதிவேடுகள் பேணப்படுவது நிறுவனத்திற்கு வர்த்தகத்தின் வகைப்படி சேகரிக்கப்படும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே என அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் பலகைகள் மற்றும் பதாதைகள் காட்சிப்படுத்தல் தொடர்பாக முறையான விரிவான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துதல் தொடர்பாக வருமானம் ஏதும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது.

(இ) முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைத்தல் தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டு உரிய வருமானங்கள் ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) அயகம வாராந்த சந்தையின் பன்றி இறைச்சிக் கடை ரூபா 66,900 இற்கான வரித் தொகை ஒன்றிற்காக வழங்கியிருந்த போதிலும், 2015 ஏரல் 06 ஆந் திகதி வரை முதல் மூடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானமொன்றினை இழந்துள்ளது என அவதானிக்கப்பட்டது. அதே போல் பஹல கலதுர வாராந்த சந்தையின் மீன் விற்பனை நிலையம் ரூபா 171,000 இற்கான வருடாந்த வாடகைத் தொகைக்கு வாடகை கொடுத்திருந்த போதிலும் பெப்ரவரி மாதத்தின் பின்னர் வியாபார நிலையம் செயற்படாது காணப்பட்டது. அதன் பிரகாரம் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

(உ) 2014 அக்தோபர் 31 ஆம் திகதிய இலங்கை குடியரசின் 1887 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு கலாயதன மண்டபம் நாளாந்த கட்டணம் ரூபா 1,500 இற்கு வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆண்டிற்காக 09 சந்தர்ப்பங்களில் ரூபா 7,500 போன்ற சிறு தொகையொன்றினை வருமானமாக உழைத்திருந்தது. இந்த நடன மண்டபத்தின் நிர்மாணவேலை மற்றும் மறுசீரமைத்தல்களுக்காக 2014 திசெம்பர் மாதத்தின் ரூபா 1,719,900 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை அந்த மண்டபத்தின் மூலம் மிகை வருமானம் ஒன்றினை உருவாக்குவதற்காக முறையான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை சபையினால் கடைபிடித்திருக்கவில்லை.

### 2.3.6 தொலைதொடர்பு கோபுர கட்டணம்

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த அல்லது புதிதாக நிறுவிய தொலைதொடர்பு கோபுரங்கள் தொடர்பாக 2009 ஏப்ரல் 17 திகதிய 1597/8 ஆம் இலக்க இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குறிப்பிட்டுள்ள கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனினும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டு ஜூலை மாதம் முதல் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 2014 திசெம்பர் முதல் 2015 ஜூன் வரை பெறவேண்டிய ரூபா 574,167 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 2014 செப்தெம்பர் மாதம் முதல் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

இலக்கம் WP PP – 5488 கொண்ட கப் வண்டி, பாதை தகர்க்கும் இயந்திரம், SG RC – 1410 இலக்க டிரக்டர், SG GC – 8582 இலக்கம் மற்றும் LF 4833 இலக்க கப் வண்டிக்காக ரூபா 459,905 பெறுமதியான பழுதுபார்த்தல் வேலைகள் தொடர்பாக அவ்வாறான பழுதுபார்த்தல் வேலை மேற்கொள்வதற்கு முன்னர் மற்றும் பழுதுபார்த்தல் வேலையின் பின்னர் முறைசார் விதமாக தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் சான்றுபடுத்துதல் காணப்படவில்லை.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

சபையில் சேவையாற்றி ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுள்ள மூன்று உத்தியோகத்தர்களிடம் ரூபா 25,200 இற்கான நிலுவைக் கடன் மீதியொன்று கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 21 திகதி வரையும் அறவீடு செய்திருக்கவில்லை.

### 3.3 செயற்படாத கணக்குகள்

நூலக பிணை வைப்புக் கணக்கில் ரூபா 170,785 இற்கான மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், அம் மீதி நீண்டகாலமாக காணப்பட்ட மீதியொன்றாகும். குறிப்பிட்ட வைப்பு காலங்கடந்த வைப்பு ஒன்று என வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபைக்குக் கிடைத்திருந்த மோட்டார் கிரேடர் மற்றும் இலக்கம் LR – 9601 கொண்ட லேலண்ட் இன டிபர் வண்டி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இருந்து கிடைத்திருந்த கொங்கிரீட் கலவை இயந்திரம் சபையின் தேவைக்கு பொருத்தமின்மை மற்றும் பிரதேச சபை பாதைகளில் போக்குவரத்து செய்யக் கூடிய நிலைமையில் பாதைகள் திருப்திகரமாகக் காணப்படாமையால் விளைவற்ற நிலையில் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2015 மே 20 ஆந் திகதிய பொது நிருவாக, உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக நிர்வாக மீதான அமைச்சில் இருந்து கிடைத்திருந்த இலக்கம் WP ZA – 5020 கொண்ட பெக்கோ லோடருக்கு இயக்குனர் ஒருவர் இன்மையால் விளைவற்ற நிலையில் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(iii) 2015 ஆண்டின் போது கொங்கிரீட் அச்சுக் கற்கள் பரப்பி பாதையில் கொங்கிரீட் பண்ணுவதற்காக ரூபா 4,249,925 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. கொங்கிரீட் அச்சுக் கற்கள் தயாரிக்கும் இயந்திரமொன்று சபையில் காணப்பட்ட போதிலும் அவ்வியந்திரம் சுமார் ஒரு வருட காலம் செயற்படாமல் காணப்பட்டமையால் இவ்வாறு சபைக்கு கிடைக்கக் கூடியதாகவிருந்த வருமானமொன்றினை இழந்துள்ளது.

#### (ஆ) வருடாந்த பண்டக் கணிப்பீடு

சபைக்குச் சொந்தமான வாகனங்களின் மற்றும் இயந்திர உபகரணங்களில் 04 பழுதடைந்த நிலையில் காணப்பட்டதுடன அவ் வாகனங்களின் பாவணைக்கு தவிரவைகளாக எனக் கணித்து அகற்றுவதற்கு 2015 பெப்ரவரி 20 திகதி பொதுக் கூட்டத்தில் தீர்மானித்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை இது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாமல் சபை வளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு தேவையான வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்